சுருக்கம்

கூட்டுறவு – அறிவிப்புகள் – 2014–2015ம் ஆண்டு மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு – 15 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை நவீனமயமாக்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎன்1) துறை**

**அரசாணை (நிலை) எண். 96** **நாள். 23.09.2014**

**ஜய வருடம்**
**புரட்டாசி மாதம் 7ம் நாள்.**
**திருவள்ளுவர் ஆண்டு 2045**

படிக்க :

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கடிதம் எண். 69199/2014 நவ1 நாள். 22.08.2014

----

ஆணை

2014–2015–ம் ஆண்டிற்கான கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள் :–

“15 நகர கூட்டுறவு கடன் சங்கங்களின் செயல்பாடுகளை கணினிமயமாக்கவும், வாடிக்கையாளர்களுக்கு வணிக வங்கிகளுக்கு ஈடான சேவையினை அளிக்கும் பொருட்டு ரூபாய் 1 கோடியே 50 இலட்சம் செலவில் நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் நவீனமயமாக்கப்படும்”.

2. இவ்வறிவிப்பு தொடர்பாக, மேலே படிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதத்தில், தமிழ்நாட்டில் கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டில் 53 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை நகர்புறப் பகுதிகளில் அமையப் பெற்றுள்ளது. இச்சங்கங்கள் அப்பகுதி மக்களுக்கு நகைக்கடன், வீடுகட்டும் கடன்கள் மற்றும் வீட்டு அடமானக் கடன்கள் போன்ற கடன்களை வழங்கி வருகின்றன எனவும், இந்நிலையில் நகரக் கூட்டுறவு கடன் சங்கங்கள் அதிக அளவில் வாடிக்கையாளர்களை ஈர்க்கவும், வங்கிகளுக்கு இணையாக செயல்பாடுகளை உயர்த்திடவும், நவீனமயமாக்கல் இக்காலத்தில் அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயற்படுத்த ஏதுவாக இணைப்பில் கண்டுள்ள 15 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை அவற்றின் சொந்த நிதியை கொண்டு நவீனமயமாக்கலாம் என அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. எனவே, தெரிவு செய்யப்பட்டுள்ள 15 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் நவீனமயமாக்கல் பணியை செயல்படுத்திட ஏதுவாக, ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்திற்குட்பட்டு (Tender Transparency Act) சங்கங்கள், தத்தமது சொந்த நிதியைக் கொண்டு, ஒவ்வொரு சங்கமும் தலா ரூ.10/– இலட்சத்திற்கு மிகாமல் நவீனமயமாக்குதல் பணிகளை மேற்கொள்ள தக்க ஆணை வழங்கும்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார். இந்த நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை நவீனமயமாக்கும் பணி, சங்கங்களின் சொந்த நிதியிலிருந்து மட்டுமே மேற்கொள்ளப்படும் எனவும், அரசின் நிதி கோரப்படாது எனவும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அரசுக்கு தெரிவித்துள்ளார்.

4. மேற்கூறிய சூழ்நிலையில், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் 2014–2015–ம் ஆண்டிற்கான அறிவிப்புகளில் ஒன்றான, இணைப்பில் கண்டுள்ள 15 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் தலா ரூ.10 இலட்சம் மிகாமல், தத்தமது சொந்த நிதியை கொண்டு நவீனமயமாக்குவதற்கு அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை – 10.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஜி) துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.
இகோ/ உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

## இணைப்பு

## கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிஎன்1) துறை

**அரசாணை (நிலை) எண் : 96 நாள்.23.09.2014**

| வ. எண். | மாவட்டத்தின் பெயர் | நகரக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் பெயர் | திட்டமதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) | நிதி ஆதாரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (4) | (5) | (6) |
| 1 | கோயம்புத்தூர் (2) | சிங்காநல்லூர் | 9.90 | சங்கத்தின் சொந்த நிதி |
| | | வேலாண்டி பாளையம் | 9.50 | சங்கத்தின் சொந்த நிதி |
| 2 | காஞ்சிபுரம் (5) | ஒண்டிப்புதூர் | 9.85 | சங்கத்தின்சொந்த நிதி |
| | | கொளப்பாக்கம் | 10.00 | சங்கத்தின் சொந்த நிதி |
| | | கோவூர் | 10.00 | சங்கத்தின் சொந்த நிதி |
| | | அய்யப்பன் தாங்கல் | 10.00 | சங்கத்தின் சொந்த நிதி |
| | | மேடவாக்கம் | 10.00 | சங்கத்தின் சொந்த நிதி |
| 3 | கன்னியாகுமரி (2) | வடசேரி | 6.97 | சங்கத்தின் சொந்த நிதி |
| | | கல்குளம் | 9.98 | சங்கத்தின் சொந்த நிதி |
| 4 | மதுரை (1) | திருநகர் | 10.00 | சங்கத்தின் சொந்த நிதி |
| 5 | தஞ்சாவூர் (1) | அதிராம்பட்டிணம் | 10.00 | சங்கத்தின் சொந்த நிதி |
| 6 | தேனி (1) | போடிநாயக்கனூர் | 10.00 | சங்கத்தின் சொந்த நிதி |
| 7 | திருநெல்வேலி (1) | விக்கிரமசிங்கபுரம் | 1.91. | சங்கத்தின் சொந்த நிதி |
| 8 | திருவள்ளூர் (1) | பொன்னேரி | 10.00 | சங்கத்தின் சொந்த நிதி |
| 9 | சேலம் (1) | அம்மாபேட்டை | 10.00 | சங்கத்தின் சொந்த நிதி |
| | | கூடுதல் | 138.11 | |

எம்.பி. நிர்மலா
அரசு முதன்மைச் செயலாளர்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்